**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**

**கல்விப்பீடம்**

**விசேட தேவைகள் கல்வியில் கல்விமாணி சிறப்பு நிகழ்ச்சித்திட்டம் - 2025/2026**

**இறுதிப்பரீட்சை- 2026**

**மட்டம் - 05**

**SNU6227– ஆரம்பக்கல்வி**

**காலம்: மூன்று(03) மணித்தியாலங்கள்**

0037

**திகதி:-26.06.2026** **நேரம்: பி.ப 01.30 - பி.ப 04.30**

**பகுதி I இல் சகல வினாக்களுக்கும், பகுதி II இலிருந்து எவையேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடை எழுதுக.**

## பகுதி - I

1. ஆரம்பக் கல்வியில் ‘சிறுவர் மையக் கல்வி’ என்னும் எண்ணக்கருவைச் சுருக்கமாக விளக்குக.

2. ‘உள்ளடங்கல் கல்வி’என்பதனால் கருதப்படுவது யாது?

3. ஆரம்பக்கல்வி ஆசிரியர் எவ்வாறு வளப்படுத்துநராக செயற்படமுடியுமெனச் சுருக்கமாக விளக்குக.

4. ஆரம்ப வகுப்பு மாணவரிடையே விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும் **நான்கு (04)** தேர்ச்சிகளைப் பட்டியலிடுக.

5. பின்வரும் கணிதச் செய்கைகள் மூன்றாம் வகுப்பு மாணவனொருவனால் மேற்கொள்ளப்பட்டவையாகும்.
   63 + 82 = 46, 54 + 71 = 26, 90 + 56 = 47, 82 + 95 = 78

   இந்தக் கூட்டல் பிரசினங்களில் மாணவனின் வழு**வை** இனங்காண்க. இனங்கண்ட வழுவினைத் திருத்துவதற்கு பொருத்தமானகற்பித்தல் உத்தியைபிரேரிக்க.

6. ஆரம்பக் கல்வியில் ‘நிலைபேறான அபிவிருத்தியின்’முக்கியத்துவத்தை சுருக்கமாகக் குறிப்பிடுக.

7. இலங்கையில் 1997 ஆம் ஆண்டின் பின்னர் அறிமுகப்படுத்தப்பட்ட இரண்டு (02) பிரதான ஆரம்பக் கல்வி மறுசீரமைப்புக்களைச் சுருக்கமாக விளக்குக.

8. ‘செயல் மூலம் கற்றல் என்பது ஆரம்பக் கல்வியில் முக்கியதத்துவமாகும்.’ இக்கூற்றினை பொருத்தமான உதாரணத்துடன் விளக்குக.

**(08 x 05 = 40 புள்ளிகள்)**

## பகுதி–II

9. **அ.**‘வகுப்பறைக் கணிப்பீடு’ என்பதனால் கருதப்படுவது யாது? **(05 புள்ளிகள்)**

   **ஆ.** ஆரம்பவகுப்புக்களில் பயன்படுத்தப்படும் வித்தியாசமான கணிப்பீட்டு முறைகளை விளக்குக. **(07 புள்ளிகள்)**

   **இ.** ஆரம்பக் கல்வியில் தொடர்கணிப்பீட்டின் முக்கியத்துவத்தினைக் குறிப்பிடுக. **(08 புள்ளிகள்)**

10. **அ.** தற்காலத்தில் ஆரம்பக் கல்வி எதிர்கொள்ளும் பிரதான சவால்களைப் பட்டியலிடுக. **(08 புள்ளிகள்)**

    **ஆ.** கிராமப்புறப் பாடசாலைகளில் மாணவர் வருகையையும் பங்குபற்றலையும் முன்னேற்றுவதற்கு செயற்றிட்டமொன்றைத் தயாரிக்குக. **(12 புள்ளிகள்)**

**11. அ.** மத்திய ஆரம்ப வகுப்புகளில் (முதன்மைநிலை 2) உள்ள பிள்ளைகளின் விருத்தி இயல்புகளை விபரிக்குக. **(06 புள்ளிகள்)**

**ஆ.** மேலே நீங்கள் குறிப்பிட்ட விருத்தி இயல்புகளில் ஏதாவது **மூன்று (03)** இயல்புகளை விருத்தி செய்வதற்கு உதவக் கூடிய வகையில் ஆசிரியர் எவ்வாறு வகுப்பறைச் செயற்பாடுகளை ஒழுங்கமைக்கமுடியுமென விளக்குக. **(14 புள்ளிகள்)**

**12. அ.** ஆரம்பக் கல்வியின் **மூன்று (03)** நோக்கங்களை விளக்குக. **(06 புள்ளிகள்)**

**ஆ.** பின்வருவனவற்றில் மரியாமொண்டிசூரியின் கல்வித் தத்துவத்தின் தாக்கத்தினை பரிசீலிக்குக.
- ஆரம்ப வகுப்புக்களில் கற்பித்தல் - கற்றல் முறைகள்
- ஆசிரியர் - மாணவர் உறவு
- வகுப்பறைச் சூழல் **(14 புள்ளிகள்)**

**13.** 'ஆரம்பக் கல்வியின் தரமானது ஆசிரியர்களின் தேர்ச்சியிலேயே பெரும்பாலும் தங்கியுள்ளது'

**அ.** இக்கூற்றினை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா, உமது விடையை நியாயப்படுத்துக. **(10 புள்ளிகள்)**

**ஆ.** ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்களின் தரத்தினை உயர்த்துவதற்கு இலங்கையில் அமுல்படுத்தப்படும் **இரண்டு (02)** வாண்மைவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை விபரிக்குக. **(10 புள்ளிகள்)**

**14. அ.** ஆரம்பப் பாடசாலையில் உள்ள ஏதாவதொருவகுப்பிற்குரியசுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் பாடத்திலிருந்து கருப்பொருள் ஒன்றினைத் தெரிவுசெய்க. **(04 புள்ளிகள்)**

**ஆ.** தெரிவு செய்யப்பட்ட கருப்பொருளினை அடிப்படையில் சுருக்கமான பாடத்திட்டமிடலை தயாரிக்குக. **(10 புள்ளிகள்)**

**இ.** மேலே நீங்கள் தயாரித்த பாடத்திட்டமிடலில் மாணவரின் கற்றலை கணிப்பீடு செய்வதற்கு பொருத்தமான பார்ப்புப் பட்டியல் அல்லது மதிப்பீட்டு செவ்வைபார்ப்பு அளவுகோலினைத் தயாரிக்குக. **(06 புள்ளிகள்)**

- *முழுப்பதிப்புரிமைபெற்றது* -